# செம்
# முசுறு



ஜானகி சூரியாரச்சி

# செம் முசுறு



கதையும் சித்திரங்களும்

**ஜானகி சூரியாரச்சி**


**டிக்கிரி பதிப்பகம்**

1490/8 ஹோக்கந்தர வீதி,
பன்னிப்பிட்டி, இலங்கை.
Tel: +94-11-2847438, E-mail: janu@tikiri.com,
Web: www.tikiri.com

முதற்பதிப்பு – 2004

© ஜானகி சூரியாரச்சி

ISBN: 955-1090-07-1

**இன, மத பேதமற்ற,**
**அன்பும் ஆதரவும் நிரம்பிய,**
**மலர் போன்ற பிள்ளைகளுக்கு அன்புடன்**
**இந்நூலைச் சமர்ப்பிக்கிறேன்.**

மொழி உதவி
ரிம்ஸா ஹஸன்
என். ருமணன் விஜயன்
வி. ஸ்ரீசந்திரன்
அனோஜா ஸ்ரீகாந்தன்
எம். பி. எம். எம். ஷிப்லி
புஷ்பா சிவகுமாரண்

கணினி எழுத்தமைப்பு
ஜானகி சூரியாரச்சி

# செம் முசுறு

மாம்பழங்கள் பழுத்துத் தொங்கும் பருவகாலத்தில் அந்த வாசனை எங்கும் பரவும். குவிருகள், தேனீக்கள், வண்ணத்துப்பூச்சிகள் கூட்டம் கூட்டமாக, அந்த வாசனையை உணர்ந்து, அந்த மாமரத்தை நோக்கிச் சென்றன. பல வகையான குருவிகள் ''கீச் - கீச்'' என ஓசை எழுப்பிக் கொண்டு அந்தப் பழங்களைச் சுவைத்துக் கொண்டு இருந்தன.





அந்த நேரத்தில், உணவு தேடி வந்த முசுறுக் கூட்டமும் அந்த மாம்பழ வாசனையை உணர்ந்தது. முசுறு என்பது, மரங்களில் கூடு கட்டிக் கொண்டு வாழும் பெரிய, சிவப்பு எறும்பு.

‘‘ம்….. நல்ல வாசனை. அருகே, இனிய பழங்களையுடைய மா மரம் ஒன்று இருக்க வேண்டும்’’ என முசுறுகள் தமக்குள் கூறியவாறே அங்கும் இங்கும் பார்த்தன.

‘‘ஆ! அதோ இருக்கிறது மா மரம். ஒடுவோம், ஒடுவோம்.’’

அந்த முசுறுக் கூட்டம் முழுவதும் சுவையான பழங்களைக் கொண்ட அந்த மா மரத்தை நோக்கி ஒடியது.

‘‘ம்…. சுவையோ சுவை !’’ முசுறுகள் அந்த மரத்தில் ஏறி, போதுமான வரை சாற்றைக் குடித்தன.



‘‘நாங்கள் வீடு கட்டுவதற்கு இந்த மரம் மிகவும் நல்லது. எனவே, நாம் உணவு தேடத் தூரச் செல்ல வேண்டிய அவசியம் இல்லை அல்லவா?’’ முசுறுகள் கதைத்துக்கொண்டன.

‘‘ஆம்! ஆம்! நாங்கள் வீடு கட்ட இந்த மரம் மிகவும் நல்லது. வேறு யாருக்கும் எந்த விதமான கரைச்சலும் இல்லை அல்லவா?’’ என்று எல்லா முசுறுகளும் நினைத்தன.



பின்னர், முசுறுக் கூட்டம் ஒன்றாகச் சேர்ந்து வீடு கட்டத் தொடங்கியது. முதலில் முசுறுக் கூட்டம் மரத்தில் ஒரு நல்ல கொப்பைத் தெரிவு செய்தது. இரண்டு, மூன்று மா இலைகளைச் சேர்த்து ஒரு கூட்டைக் கட்டியது.

அப்பா முசுறுகள், அம்மா முசுறுகள், சிறுய முசுறுகள் எல்லாம் ஒன்று சேர்ந்து, முசுறுக் கூட்டைக் கட்டின.



எல்லாம் ஒன்று சேர்ந்து வேலை செய்ததால், சொற்ப நேரத்தில் முசுறுக்கூட்டைக் கட்டி முடித்தன.
சிறிய முசுறுகள் இருப்பதற்குச் சிறு, சிறு அறைகளையும் கட்டின.
சிறிய முசுறுகள் புதிய வீட்டைச் சுற்றிச் சுற்றிக் குதூகலத்துடன் ஓடி, ஆடி விளையாடின.

அவை எல்லாவற்றிற்கும் மிகவும் சந்தோஷம்.
ஆனால், ஒரு முசுறு மட்டும் ஒரு மூலையில் ஒதுங்கி இருந்தது.
அது தான் செம் முசுறு.
செம் முசுறுக்கு இப்படிக் கூட்டமாக இருக்க விருப்பமில்லை. செம் முசுறுக்கு எப்பொழுதும் கோபம் வரும்.
மற்றைய முசுறுகளோடு இந்த முசுறு சண்டை போடும். ஒருவருக்கும் உதவி செய்வதும் இல்லை.



யாராவது உதவி கேட்டு வந்தால், ‘‘என்னால் இயலாது, எனக்கு வேலை இருக்கிறது’’ என்று கூறும்.

‘‘கூட்டத்தோடு இருப்பது பெரிய கரைச்சல். எனவே, நான் தனியாக ஒரு வீடு கட்டி இருக்க வேண்டும்’’ என்று செம் முசுறு நினைத்தது.

பின்பு, மரத்தில் நல்ல ஒரு கொப்பைத் தெரிவு செய்து, வீடு கட்டத் தொடங்கியது. இரண்டு இலைகளை எடுத்து ஒன்றாக இணைத்துக் கூட்டைக் கட்ட முயற்சி செய்தது.

ஆனால், அந்த வேலை, நினைத்தது போல இலகுவாக இருக்கவில்லை. ஓர் இலையைப் பிடிக்கும் போது, மற்றைய இலை நழுவிப் போனது.



“உன்னுடைய கூட்டைக் கட்டுவதற்கு நாங்களும் உதவி செய்யவா?” செம் முசுறு இரண்டு இலைகளையும் பிடித்துக்கொண்டு அங்கும் இங்குமாக அலைவதைக் கண்ட மற்றைய முசுறுகள் இப்படிக் கேட்டன.
“இல்லை! இல்லை! தேவையில்லை. என்னால் தனியாக வேலை செய்ய முடியும்.” செம் முசுறு பிடிவாதமாகக் கூறியது.

ஆகவே, மற்றைய முசுறுகளும் மௌனமாக இருந்தன.
செம் முசுறு, இரண்டு இலைகளையும் சேர்ப்பதற்கு நாள் முழுவதும் கஷ்டப்பட்டது. ஆனாலும் முடியவில்லை.
முசுறுக் கூட்டை மற்றைய முசுறுகள் விரைவாகச் செய்து முடித்தன. ஆனால், செம் முசுறு மாத்திரம் தனது கூட்டைக் கட்ட நாள் முழுவதும் சிரமப்பட்டும் முடியவில்லை.

“செம் முசுறே! நாங்கள் உங்களுக்கு உதவி செய்யவா? உங்களால் தனியாகக் கூட்டைக் கட்ட முடியாது. முசுறுக் கூடு ஒன்றைக் கட்ட பல முசுறுகள் தேவைப்படும். நாங்கள் எல்லோருமாகச் சேர்ந்து உங்களுக்கு விரைவில் வேலையை முடித்துத் தருகின்றோம்.”
செம் முசுறைப் பார்த்துக் கவலைப்பட்ட ஏனைய முசுறுகள் மிகவும் கவலையோடு கூறின.

“வேண்டாம். எனக்கு ஒருவருடைய உதவியும் தேவையில்லை. நான் தனியாக என் கூட்டைக் கட்டுவேன்.”
செம் முசுறு கர்வத்தோடு கூறியது.



மாலை நேரமானதும் செம் முசுறுக்குச் சரியான களைப்பு.
காலையிலிருந்து இரண்டு இலைகளையும் சேர்க்க முயன்றும் இயலாமல் போய்விட்டது.
பொழுது விடியும் வரை அது முயற்சி செய்தது. ஆனாலும் இயலா மல் போய்விட்டது. அடுத்த நாளும் வேலையை ஆரம்பித்தது.

மற்றைய முசுறுகள் எல்லாம் சேர்ந்து வீடு கட்டி, உணவு உண்டு, ஒற்றுமையாகப் பாடி, சந்தோஷத்துடன் இருக்கும் போது, செம் முசுறு மாத்திரம் வியர்வை சிந்தக் கூட்டைக் கட்ட முயற்சி செய்து
கொ ண்டிருந்தது.
மற்றைய முசுறுகள் பாடிக்கொண்டு இருப்பதைக் கண்ட செம் முசு றுக்குக் கோபம் வந்தது.
இப்படி இருக்கும் போது, கடுமையாகக் காற்று வீச ஆரம்பித்தது.
முசுறின் இலை சுழுன்றது.





அது, இலையை இறுக்கமாகப் பிடித்துக்கொண்டு, அந்தப் பக்கமும் இந்தப் பக்கமும் சாய்ந்தது. முசுறு நன்றாகப் பயந்து விட்டது.

‘‘கடும் மழை பெய்யப் போகின்றது!’’

மற்றைய முசுறுகள் விரைவாகத் தமது கூட்டிற்குள் நுழைந்தன.
மற்றைய முசுறுகளின் கூடு காற்றுக்கு அசையவில்லை.
மெல்ல மெல்ல மழை பெய்யத் தொடங்கியது.

‘‘செம் முசுறே! மழையில் நனையாமல் எங்களுடைய வீட்டிற்குள் வா.’’ இன்னமும் ஒர் இலையில் தொங்கியபடி கஷ்டப்பட்டுக்கொண்டிருந்த செம் முசுறைப் பார்த்து, ஏனைய முசுறுகள் இப்படிக் கூறின.

‘‘வேண்டாம்! நான் தனியாக இருப்பேன்’’ என்று செம் முசுறு கூறியது.



காற்றும், மழையும் வரவர அதிகரித்தன.
செம் முசுறு மழையில் நனைந்து நனைந்து தன்னுடைய கூட்டைக் கட்ட முயற்சி செய்தது.
ஆனாலும் எந்த விதப் பயனுமில்லை.
அப்பொழுது காற்று வேகமாக வீசத் தொடங்கியது.
முசுறு தொங்கிக்கொண்டிருந்த இலை காற் றினால் சுழல ஆாம்பித்தது.
காம்பிலிருந்து விடுபட்டுத் தூரப் போய் விழுந்தது.

“ஆ! ஐயோ…..”
செம் முசுறு கத்தியது.



மற்றைய முசுறுகள் தமது கூட்டுக்குள் இருந்ததால், அது கத்தும் சத்தம் அவைகளுக்குக் கேட்கவில்லை.
அது, இலையோடு, தூர வீசப்பட்டு விழுந்தது.
மழை நீர், அதன் உடம்பின் மேலாகப் பாய்ந்தது.
அது நீரில் மூழ்கியது.
சிறிது நேரத்தில் மழை ஓய்ந்தது.
மற்றைய முகறுகள், தமது கூட்டிலிருந்து வெளியே வந்தன.

‘‘ஆ! எங்களுடைய செம் முசுறு எங்கே?’’
அவை, அங்கும் இங்கும் பார்த்தன.
‘‘ஆ! எங்களுடைய செம் முசுறைக் காணவில்லை. அதற்கு என்ன நடந்தது?’’
எல்லா முகறுகளும் குழப்பம் அடைந்தன.
‘‘ஐயோ, தேடுவோம், தேடுவோம். செம் முசுறுக்கு என்ன நடந்தது என்று பார்ப்போம்.’’
முகறுக் கூட்டம் எல்லா இடமும் ஓடி ஓடிச் செம் முசுறைத் தேடியது.

“செம் முசுறே! செம் முசுறே!!”

“ம்………. ஒரு சத்தமும் இல்லை. ஆ! எங்களுடைய செம் முசுறுக்குக் கரைச்சலோ தெரியவில்லை”
முசுறுக் கூட்டம் எல்லா இடங்களிலும் செம் முசுறைத் தேடியது.

“செம் முசுறே! செம் முசுறே!! ஆ! அதோ! அங்கே நிற்கிறது எங்களுடைய செம் முசுறு.”

குப்பைக் குவியல் ஒன்றில் அகப்பட்டிருந்த செம் முசுறை அவை கண்டன. முசுறுக் கூட்டம் ஓடோடிச் சென்று குப்பைக் குவியலிலிருந்து செம் முசுறை இழுத்து எடுத்தன.

அதற்குப் பிறகு, செம் முசுறைத் தமது கூட்டிற்குள் எடுத்துச் சென்றன. ஆ! நீரில் நனைந்த செம் முசுறு மிகவும் கஷ்டப்பட்டது.
கண்களைத் திறக்க முடியவில்லை. முகமும் வெளுத்துப்போய் விட்டது. கதைக்கவும் முடியவில்லை.



முசுறுக் கூட்டம் ஒன்று சேர்ந்து, செம் முசுறைப் பராமரித்தன. செம் முசுறு மெல்ல மெல்லக் கண்களைத் திறந்தது.

“ஐயோ! நான் எங்கே இருக்கின்றேன்?” என்று முசுறு கேட்டது.

“மழையில் நனைந்து, காற்றினால் வீசப்பட்டு, குப்பைக் குவியலில் அகப்பட்டுக் கிடந்த உங்களை நாங்கள் எடுத்துக்கொண்டு வந்தோம்.”

முசுறுக் கூட்டம் கூறியது.
அது, மிகவும் வெட்கப்பட்டது.

அது, வெட்கத்தால் தலை குனிந்தது.



“முசுறே! நீங்கள் எங்களுடன் சேர்ந்து ஒற்றுமையாக இருந்திருந்தால் இப்படி நடந்திருக்காது அல்லவா? நாங்கள் எல்லோரும் ஒற்றுமையாக இருந்தால் தான் எங்களுடைய பலம் அதிகரிக்கும்.”
முசுறுக் கூட்டம் செம் முசுறைப் பார்ததுக் கூறியது.

“ஆம்! ஆம்! எனக்கு விளங்குகிறது. என்னை மன்னியுங்கள். எனக்குத் தனிக் கூடு தேவையில்லை.
நாங்கள் எல்லோரும் ஒன்றாகச் சேர்ந்து இருப்போம்.
ஒரு துன்பம் ஏற்படும் போது, கஷ்டம் ஏற்படும் போது, இது போன்ற நல்ல நண்பர்கள் இருப்பது எவ்வளவு சந்தோஷமான விஷயம்?”
செம் முசுறு கூறியது.

எல்லா முசுறுகளும், செம் முசுறை அன்போடு ஏற்றுக் கொண்டன. இதற்குப் பின்பு, செம் முசுறு, ஒற்றுமையாகவும் சற்தோஷமாகவும் முசுறுக் கூட்டில் வாழ்ந்து வந்தது.



## Books written by the Author





ISBN 955-1090-07-1

Price: 100/-

**TIKIRI PUBLISHERS**

1490/8, Hokandara Road, Pannipitiya, Sri Lanka.

Tel: +94-11-2847438 E-mail: janu@tikiri.com Web: www.tikiri.com